LIBRARY
18 APR 1962
THE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Wednesday, the 15th March 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER: As the Hon. Minister for Finance is not here now, Short Notice Question No. 7 will be taken up afterards.

Silver ore (Ariyalur)

* 831 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

திருச்சி மாவட்டம் அரியலூருக்கருகில் கிடைக்கும் வெள்ளியைத் தோண்டி எடுக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN: No occurrences of silver have been recorded near Ariyalur in Tiruchirappalli district.

SRI S. M. ANNAMALAI: இங்கு கிடைப்பது வெள்ளி அல்லது வெள்ளீயம் கிடைப்பதாக சர்க்காருக்கு தகவல் அனுப்பியிருக்கிறார்களா ? அப்படியானால் அதைப்பற்றி எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN: வெள்ளீயம்கூட இல்லை. ஸிங்க் மாதிரி இருந்தது. மெடாலிக் ஸிங்க் பூஸ்புல் மினரல் அல்ல என்று தெரிவிக்கப்பட்டது.

Bridge across Cauvery (Pulampatti)

MR. SPEAKER: As the hon. Member who gave notice of Question No. 832 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* 832 *Q.*—SRI P. S. CHINNADURAI: கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம்-கோவை ஜில்லாக்களை இணைக்கும் முறையில் மேட்டூருக்கும் பவானிக்கும் இடையில் பூலாம்பட்டி கிராமத்தினருகில் காவேரி நதி மீது பாலம் கட்ட வேண்டுமென்று இடைப்பாடி பஞ்சாயத்து யூனியன் 1960-ம் ஆண்டு டிசம்பர் 12-ம் தேதிய கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை சர்க்கார் பெற்றுக் கொண்டார்களா ?